STC No. 18/2021
Date : 24.08.2022
மசா.1 : லோகேஷ்வரன், த/பெ. துரைராஜ்

**குறுக்கு விசாரணை.**

1. நான் B.Sc , Information System Management படித்துள்ளேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மசா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். என் அறிவுறுத்தலின் பேரில் தான் மசா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அப்போது வழக்கறிஞரிடம் அனைத்து சங்கதிகளையும் கூறி அறிவிப்பு அனுப்புமாறு அறிவுறுத்தினேன்.

2. மசா.ஆ.5 ஆவணம் தயார் செய்தபின்னர் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மசா.ஆ.5 ஆவணத்தில் வாகனத்தை பற்றிய தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு 2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது . மசா.ஆ.5 ஆவணம் 03.11.2020 அன்று அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

3. இவ்வழக்கை பற்றி நன்கு அறிந்து வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்த பின்னர் தான் சத்திய பிரமாண வாக்குமூலத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . வழக்கறிஞர் என்னிடம் கூறியதின் அடிப்படையில் தான் மசா.ஆ.5 ஆவணம் அனுப்பப்பட்ட தேதியை குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் மசா.ஆ. 5 ஆவணம் 31.10.2020 வருடம் என்று அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. இவ்வழக்கு சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டேனா என்றால் சாட்சி முதலில் தாக்கல் செய்துவிட்டேன் என்று கூறினார், பிறகு வழக்குக்கு தேவையான ஆவணங்கள் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார் .

மசா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் 20 ரூபாய் முத்திரை தாளில் பெறப்பட்டது. வாகனம் வாங்குவது சம்மந்தமாகவும் அதற்கு என்ஓசி வழங்குவது சம்மந்தமாகவும் எதிரி காவல் நிலையத்தில் வைத்து 4 காசோலைகள் என்னிடம் கொடுத்தார்.

5. மசா.ஆ.1 ஆவணம் பொய்யான ஒன்று என்றும் காலி முத்திரை தாளில் கையொப்பத்தை பெற்றுக்கொண்டு தற்போது நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முரணாக பதில் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. மசா.ஆ.1 ஆவணத்தில் சாட்சியாக உள்ள நபர்களை ஏன் இவ்வழக்கில் வழக்கு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் வாகனத்தை விற்பவரும் அதாவது எதிரியும் அவரது மனைவியும் அந்த ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளதால் அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை.

6. அவர் கொடுத்த நான்கு காசோலைகளில் இரண்டு காசோலைகளை வங்கியில் தாக்கல் செய்துவிட்டேன். அப்போது எதிரி வேறு வீட்டிற்கு மாறி சென்றுவிட்டார், விலாசம் கண்டுபிடிக்க முடியவில்லை. வழக்கு தொடரலாம் என்று நண்பர்களிடம் அறிவுரை கூறியபோது தாக்கல் செய்கின்ற மனு எதிரிக்கு செல்லவேண்டும் என்பதால் எதிரியின் விலாசத்தை கண்டறிந்த பின்னர் மீதம் இருந்த இரண்டு காசோலைகளையும் வங்கியில் தாக்கல் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

7. அந்த வாகனம் தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலைகளில் மசா.ஆ.3 மற்றும் மசா.ஆ.4 ல் எனது பெயர் இல்லை என்றால் எனது வங்கி கணக்கு எண் அதிலுள்ளது. காசோலைகளின் முகப்பில் உள்ள வங்கி எண் என்னுடையது என்பதற்கு எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். காசோலையின் பின்பக்கத்தில் பெயர் எழுதப்பட்டுள்ளது. மசா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு புகார் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி 4 காசோலைகள் என்னிடம் கொடுத்தார் என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால் சாட்சி முதலில்

கூறியுள்ளேன் என்று கூறினார். பிறகு வழக்கு காசோலைகளுக்காக மட்டுமே மேற்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

8. காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன் என்றும் அதன் அடிப்படையில் தான் எதிரியிடமிருந்து காசோலைகள் பெற்று தரப்பட்டது என்றால் திரு.பழனி , காவல் ஆய்வாளர் முன்னிலையில் எதிரி காசோலைகளையும் கடிதத்தையும் என்னிடம் வழங்கினார் . மசா.ஆ.5 ஆவணத்தின் தேதியும் புகார் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதியும் மாறுபட்டுள்ளது என்பது பற்றி வழக்கறிஞரிடம் நான் கேட்கவில்லை. எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது பற்றி வழக்கறிஞரிடம் கேட்டபொழுது அறிவிப்பு திருப்பப்பட்டது என்று முதல் தடவை கூறினார். இரண்டாம் தடவை நான் கேட்டபொழுது அவர் கூறிய பதில் எனக்கு ஞாபகமில்லை.

(நேரமின்மை காரணத்தாலும் வழக்கறிஞரின் வேண்டுகோளாலும் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. )